JM MEDIA Production & College

JUSTICE MORAL Newsletter

WWW.JMMEDIA.LK

08 DECEMBER 2025 | EDITION 01

# இலங்கையின் மிகப் பிரமாண்டமான ஊடகப் பட்டமளிப்பு விழா கொழும்பு BMICH இல்

இலங்கை ஜே.எம் மீடியா கல்லூரியின் 6 ஆவது பட்டமளிப்பு விழா நவம்பர் மாதம் 22 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை ஜே.எம் மீடியா தயாரிப்பு மற்றும் கல்லூரியின் தலைவரும் ஊடகவியலா-ளருமான சட்டமாணி ராஷிட் மல்ஹர்டீன் தலைமையில் மிக பிரமாண்டமாக நடைபெற்ற இந்த பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாக பேராசிரியர் கலாநிதி எம்.எஸ்.எம்.ஜலால்டீன் கலந்து கொண்டார்.




கௌரவ அதிதிகளாக பிபிசி செய்தி சேவையின் முன்னாள் செய்தியாளரும் நியூஸ் வயர் செய்தி சேவையின் ஸ்தாபகர் அஸாம் அமீன் மற்றும் ஏ.ஒ.ஜி கெம்பஸின் இயக்குனர் ஷாகிர் தாரிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் சிறப்பு அதிதிகளாக ஜே.எம் மீடியா நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் வலையமைப்பு பொறியியலாளருமான ரஸா மல்ஹர்டீன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் வசந்தம் டி.வி செய்தி வாசிப்பாளருமான ஜனரஞ்சன் யோகராஜ், வசந்தம் எப்.எம், டி.வி செய்தி முகாமையாளர் சித்தீக் ஹனீபா, மூத்த ஒளி, ஒலிபரப்பாளர் யு.எல்.எம் யாகூப், மூத்த பத்திரிக்கையாளர் அமீர் ஹுசைன், வசந்தம் டி.வி செய்தி வாசிப்பாளர் சந்திரிகா ஆர்முகம், தினகரன் பத்திரிக்கையாளரும் பாதுகாப்பு அமைச்சின் தமிழ் ஊடகப் பொறுப்பாளருமான சாதிக் சிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 3 MONTHS CERTIFICATE IN MASS MEDIA 20TH BATCH பிரியாவிடை நிகழ்வு

2025 நவம்பர் 09 ஆம் திகதி ஜே.எம் மீடியா கல்லூரியின் Certificate in Mass Media 20ஆவது குழு மாணவர்களால் கல்லூரி வளாகத்தில் அவர்களது பிரியாவிடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் விரிவுரையாளர்கள், ஊழியர்கள் உட்பட மாணவர்கள் கலந்து கொண்டனர் விரிவுரையாளர்களால் மாணவர்களின் எதிர்கால வெற்றிக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதோடு மாணவர்கள் தங்கள் பயணத்தின் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

இப்பிரியாவிடை நிகழ்வு கேக் Cutting உடன் நிறைவுக்கு வந்தது.




”ஜே.எம் மீடியா கல்லூரியில் கற்ற அனுபவம் எங்கள் வாழ்க்கையில் புதிய பாதையை திறந்தது” என மாணவர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வின் முடிவில் அனைவரும் இனிய நினைவுகளை எடுத்துச் சென்றனர்

(தொடர் பக்கம் 01)

**இதன் போது வெகுஜன ஊடக கற்கை நெறி புகைப்படக்கலை மற்றும் வீடியோகலை கற்கை நெறி ஆகியவற்றை நிறைவு செய்த சுமார் 200 மாணவர்கள் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டனர்.**

வெகுஜன ஊடக கற்கை நெறியின் 20ஆவது குழுவின் மாணவர்களுக்கான ஹெலிகாப்டர் சவாரிக்கான அதிஷ்ட வெற்றியாளர் டிஜிட்டல் குழுக்கல் முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டதோடு அதற்கான சீட்டு மேடையில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் ஊடகத்துறையின் முக்கியத்துவம் குறித்தும் ஊடக ஒழுக்கங்களுடன் கூடிய ஊடகவியலின் முக்கியத்துவம் குறித்தும் விரிவாக பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜே.எம் மீடியா தயாரிப்பு மற்றும் கல்லூரியானது கடந்த 10 வருடங்களாக இலங்கை மற்றும் சர்வதேச ரீதியில் பல்வேறு சேவைகளை செய்து வருகிறது. மேலும், பிரயோக ரீதியில் ஊடகக் கற்கை நெறியை சிறப்பாக வழங்கும் அரச டிவெக் (TVEC) அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு ஊடக கல்லூரியாகவும் திகழ்கிறது. இந்த வெகுஜன ஊடக கற்கை நெறியின் 21ஆவது குழுவும் புகைப்படக்கலை மற்றும் வீடியோகலை கற்கை நெறியின் 13 ஆவது குழுவும் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்

மேலதிக விபரங்களுக்கு 0777128348 ஐ தொடர்பு கொள்ளலாம்.

# ஜே.எம் மீடியா தயாரிப்பு நிறுவனத்தின் சேவைகள்

மேலும்...

**Wedding Kaseeda, Parent's Guidence Program**

## WEDDING KASEEDA

ஜே.எம் மீடியா தயாரிப்புகளில் ஒன்றான Recording & Edit சேவையினால் 2025 நவம்பர் மாதம் 04 ஆம் திகதி திருமண கஸீதா ஒன்று Edit செய்து கொடுக்கப்பட்டது. அந்த கஸீதா மணமகனும் மணமகளும் திருமணம் முடிந்து வீட்டிற்கு வரும் போது ஒலி பரப்புவதற்கு என்றும் ஆகவே அதை நன்றாக செய்து தரும்படியும் கேட்டுக் கொண்டனர்.

## SHE CARES WOMEN'S ORGANIZATION இன் PARENT'S GUIDENCE PROGRAM.

2025 நவம்பர் மாதம் 08 ஆம் திகதி திஹாரிய She Cares Women's Organization ஆல் Crystal Reception & Vocational Center இல் குழந்தைகளின் மனநலத்தை நாம் ஏன் கவனிக்க வேண்டும் எனும் தலைப்பில் ஒரு விரிவுரை நடாத்தப்பட்டது அதில் Videography சேவை ஜே.எம் மீடியா தயாரிப்பு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.



அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க அந்த Edit அழகான முறையில் சரியான நேரத்தில் எமது குழுவினரால் செய்து கொடுக்கப்பட்டது.

எமது அந்த சேவை குறித்து எமது Client மிகவும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்ததாக அவரின் கருத்துக்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

எப்பொழுதும் நம்பகத்தன்மையையும் தரத்தையும் அடிப்படையாக கொண்டு இடம்பெறக்கூடிய எமது சேவைகள் அவர்களின் நிகழ்விலும் காணக்கூடியதாக இருந்தது என அவர்களின் கருத்துக்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.



மாணவர்களின் படைப்பாற்றலுக்கு வித்திடும் JM Media கல்லூரியின் புகைப்படக்கலை மற்றும் வீடியோ கலையின் 13 ஆவது புதிய குழு ஆரம்பம்.

ஜே.எம் மீடியா கல்லூரி நடாத்தும் புகைப்படக்கலை மற்றும் வீடியோகலை பயிற்சி நெறியின் 13 ஆவது குழு 2025 நவம்பர் மாதம் 06 ஆம் திகதி வெற்றிகரமாக ஆரம்பமானது.

# PHOTOGRAPHY & VIDEOGRAPHY

## 13வது குழு ஆரம்பம்

கல்லூரியின் 13வது புதிய குழுவின் ஆரம்ப நிகழ்வு மிக சிறப்பாக நடைபெற்றதோடு ஜே.எம் மீடியா நிறுவனத்தின் Chairman மற்றும் Ceo ஆக இருக்கும் சட்டமாணி Raashid Malhardeen தலைமை உரையாற்றினார்.

இந்தப் பயிற்சி நெறியில் மாணவர்கள் தொழில்முறை புகைப்படம் மற்றும் வீடியோ தயாரிப்பில் ஆழ்ந்த பயிற்சி பெறுவதோடு, அவர்களின் திறன்களை வெளிப்படுத்தவும் வழி வகுக்கிறது.

ஜே.எம் மீடியா கல்லூரி நடாத்தும் இப்பாடநெறி, அரச அங்கீகாரம் பெற்ற இலங்கையில் முதற்தரம் பெற்ற கல்லூரியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

SCAN HERE

இப்பயிற்சிநெறியில் இணைந்து 13 ஆவது குழு மாணவர்கள் அனைவருக்கும் கல்லூரியின் சார்பாக உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்





